

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற அண்ணா தமிழ் கழக பொன்விழா மலரினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெற்றுக் கொள்கிறார். உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர் கே.வேங்கடபதி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.பி.பீட்டர் அல்போன்ஸ் ,மேயர் எஸ்.முத்துதுரை, மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் அண்ணா தமிழர்கள் நிர்வாகிகள் உள்ளார்கள்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பிரான்ஸ் நாட்டில் உள்ள பழமையான தேசிய நூலகத்தை ஆசிரியப் பெருமக்களுடன் இணைந்து பார்வையிட்டார். தமிழ், கிரேக்கம், அரபி போன்ற தொன்மையான மொழிகளின் 5000 ஓலைச்சுவடிகளைக் கொண்டுள்ள இந்நூலகம் நவீன தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டுள்ளது. 2300க்கும் அதிகமான பணியாளர்களின் உதவியுடன் செயலாற்றும் இந்நூலகம் பிரான்ஸ் நாட்டின் முக்கிய அடையாளமாக பார்க்கப்படுகிறது. இந்த நூலகத்தின் நிர்வாக அலுவலர்களிடம் தமிழ்நாட்டின் அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் பற்றி எடுத்துரைத்து தமிழ்நாட்டிற்கு வருகை தருமாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அழைப்பு விடுத்தார்.

### பசும்பொன் வருகை தரும் கழகத் தலைவர் –

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மதுரை விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு!

## மதுரை மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் வேண்டுகோள்!







மதுரை, அக். 29 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (30ஆம் தேதி) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்திருமகனார் குருபூஜையில் பங்கேற்க வருவதையொட்டி இன்று ( 29.10.2024 ) இரவு 7மணியளவில் மதுரை விமான நிலையத்தில் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர்கள் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:

நாளை (30 ஆம் தேதி) பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் 117வது குருபூஜை விழா நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்று அவருக்கு மரியாதை செலுத்துவதற்காக நம் கழகத் தலைவர், நாடு போற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (29.10.2024 - செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணியளவில் விமானம் மூலம் மதுரை வருகிறார்.

அவருக்கு விமான நிலையத்தில் மதுரை மாவட்ட திமுக சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்க உள்ளதால் கழகத்தினர் திரளாக பங்கேற்று, கையில் இருவண்ண கொடியேந்தி வரவேற்பு கொடுத்திட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி அல்லிநகரம் நகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகளை நகர மன்ற தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், வழங்கினார். உடன் துணைத் தலைவர் வழக்கறிஞர் செல்வம் நகராட்சி பொறியாளர் குணசேகரன் நகர்நல அலுவலர் கவிப்ரியா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

### கழக 75வது பவள விழாவை முன்னிட்டு – சங்கரன்கோவிலில்

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

## ஈ.ராஜா எம்.எல்.ஏ. - ராணி ஸ்ரீ குமார் எம்.பி. துவக்கி வைத்தனர்!

தென்காசி, அக். 29 -

கழக 75 வது பவள விழா ஆண்டை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி, கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மெகா சிறப்பு மருத்துவ முகாம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மகாலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீ குமார் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,பரமகுரு, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார், தென்காசி மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் தமிழ்ச்செல்வி,மாவட்ட துணை செயலாளர்கள் ராஜகுரு, புனிதா, மாவட்ட பொருளாளர் இல.சரவணன், நகரச் செயலாளர் மு.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செ.சு.செண்பக விநாயகம் ஒருங்கிணைப்பு செய்திருந்தார். இம் மாபெரும் இலவச மெகா மருத்துவ முகாமில் பல்வேறு தரப்பிலான நோயாளிகள் 901 பேர்கள் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் மக்கள் முழு சுகாதாரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு மருத்துவ முகாம்களையும், குறிப்பாக ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக இலவச முகாம்களை நடத்திடவும் ஆணை பிறப்பித்துள்ளதை கருத்தில் கொண்டும்,கழக இளைஞர் அணி செயலாளரும்,துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக 75 வது பவளவிழா ஆண்டை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கரன்கோவிலில் மாபெரும் இலவச மெகா மருத்துவ முகாம் 26.10.2024, 27.10.2024 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

அதன்படி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி, கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மகாலில் மாபெரும் இலவச மெகா மருத்துவ முகாம் 26 ம் தேதி (சனிக்கிழமை)27 ம்தேதி (ஞாயிற்றுக்கிழமை)ஆகிய நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 4:00 மணி வரை நடைபெற்றது.

இந்த மாபெரும் இலவச மெகா மருத்துவ முகாமை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி மக்களவை உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்த மாபெரும் இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், குழந்தைகள் மருத்துவம் எலும்பு நோய் சிகிச்சைகள், தோல் நோய் சிகிச்சைகள், கண் நோய் மருத்துவம், மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், சித்த மருத்துவம்அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், இசிஜி, எக்கோ, எக்ஸ்ரே மற்றும் இரத்தம், சிறுநீர் பரிசோதனைகள் ஆகியவையும் சிறப்பு சிகிச்சையாக பல் எடுத்தல், புதிய பல் கட்டுதல்,பல் அமைத்தல், பல் சுத்தம் செய்தல், பல் சொத்தை நீக்குதல் உள்ளிட்ட அனைத்து பல் சம்பந்தமான சிகிச்சைகளும் நோயாளிகளுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது.

இந்த மருத்துவக் குழுவில் சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி நிர்வாக இயக்குனர் மருத்துவர் ஆர்.அண்ணாமலை ரகுபதி, சிறப்பு மருத்துவர்கள் ஜெ.அருண், சுருதி, விக்னேஷ், மோகன், அனிஷா,ஜோயல், அபிநயா, சிவராமன், மரியா யஸ்வந்த், அரவிந்த செல்வன், மஞ்சுளா, சுவாதி சுதா, பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மருத்துவர் சந்தோஷ், பாலமுருகன், உள்பட 45 மருத்துவர்கள் பங்கேற்று சிகிச்சை அளித்தனர்.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவ சிகிச்சையாக 409 பேர்களும், இரத்தம் மருத்துவம் சிகிச்சையாக 306 பேர்களும், பல் மருத்துவம் சிகிச்சையாக 186 பேர்களும் ஆக மொத்தம் 901 நோயாளிகள் சிகிச்சை பெற்றும்,இலவசமாக மருந்து, மாத்திரைகள் பெற்றும் மிகப்பெரிய அளவில் பயனும், பலனும் அடைந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், கடற்கரை, பெரியதுரை, சேர்மதுரை, வெள்ளத்துரை தென்காசி மாவட்ட மருத்துவர் அணி தலைவர் சுமதி, மாவட்ட அமைப்பாளர் மணிகண்டன், துணைத் தலைவர் பேச்சியம்மாள், பவித்ரா, துணை அமைப்பாளர்கள் முத்துக்குமார், குருராஜ், சுரேஷ், நாகலட்சுமி, புளியங்குடி நகரச் செயலாளர் அந்தோனிசாமி, பேரூர் செயலாளர் கே.டி.சி.குருசாமி, மாரிமுத்து, வழக்கறிஞர் முத்துராம லிங்கம், விருதுநகர் மேற்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் கார்த்திகேயன், மாவட்ட அமைப்பாளர் ராதா, துணை அமைப்பாளர்கள் சுரேஷ் கண்ணா,துணை தலைவர் ஜெய கண்ணன், பார்த்திபன், ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் தி.மு.ராஜேந்திரன் உள்பட கழகத்தினர், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழி வார்த்தையான ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்த இலவச மருத்துவ முகாமில் ஏழை, எளிய மக்கள் மிகப்பெரிய அளவில் பலன் அடைந்துள்ளனர்.

தொடர்ந்து இந்த மாபெரும் இலவச மெகா மருத்துவ முகாம் நேற்றும் (27 ம் தேதி) நடைபெற்றது. இதிலும் நூற்றுக் கணக்கான நோயாளிகள் பங்கேற்று சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த 18.10.2024 அன்று தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் வாசுதேவநல்லூரில் நடைபெற்ற இலவச முகாமில் சுமார் 600 பேர் பங்கேற்றனர்.தற்போது 2 வதாக இரண்டு நாட்கள் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் இலவச மருத்துவ முகாம் சங்கரன்கோவிலில் நடைபெற்றுள்ளது.

இதனால் பொதுமக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடுவூர் இரா.சாமிநாதன்

**அக்டோபர் 29 (2013)**



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### ஒன்றிய கழக விவசாய அணி முன்னாள் துணை அமைப்பாளர்

# வடபாதி ஆர்.எஸ்.அன்பழகன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், அக். 29 -

திருத்துறைப்பூண்டி ஒன்றிய விவசாய அணியின் துணை அமைப்பாளராக இருந்த வடபாதி ஆர்.எஸ்.அன்பழகன் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாருக்கு வயது 63.

கழகத்தின் மூத்த உறுப்பினரான வடபாதி ஆர்.எஸ்.அன்பழகன் கிளைக்கழக, ஒன்றியகழக பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர்.

அவருக்கு சாந்தி என்கிற மனைவியும், தென்னரசன், கலையரசன் என்கிற மகன்களும் உள்ளனர். மறைவு தகவல் அறிந்த கழக நிர்வாகிகளும், கழகத்தினரும், பொதுமக்களும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த வடபாதி ஆர்.எஸ்.அன்பழகன் அவர்களின் இறுதிச்சடங்கு இன்று (29.10.2024 -செவ்வாய்) காலை 11 மணியளவில் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் வடபாதியில் நடைபெறும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி

**அக்டோபர் 29 (1995)**



திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.